**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC 19/2020 | |
| Sessions : | |
| Deposition of Witness for : PW- 4 | Village: |
| Name : சுரேஷ் | Age :29 |
| Father's/Husband's Name : தங்கராசு | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 21.02.2024**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமைக் காவலர் திருமதி. ரமா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் புகைப்பட கலைஞராக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் 08.06.2019 ம் தேதி புழுதிக்குடியில் வைத்து விசாரித்தார்கள். நான் ஏன் புழுதிக்குடி சென்றேன் என்றால் அங்கு போரில் குளிக்க சென்றிருந்தேன். நான்

குறிச்சிமலை கிராமத்தில் வசித்து வருகிறேன். அசா1, அசா2 ஐ எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர்கள் எனது ஊர்க்காரர்கள் ஆவார்கள். வழக்கு சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். நான் போலிசார் விசாரணையில் வேலை விசயமாக புழுதிக்குடி அஸ்லாம் காலேஜ் அருகே சென்றுகொண்டிருந்தபோது அந்த இடத்தில் கூட்டமாக இருந்ததாகவும் நான் சென்று பார்த்தபோது அசா1 மற்றும் அசா2 வெட்டுக்காயத்துடன் இருந்ததாகவும் சென்னேனா என்றால் சொன்னேன். ராஜவேல் மற்றும் ஹரிகரனை திருவிடைமருதூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். ராஜவேல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது நான் உடன் சென்றேனா என்றால் சென்றேன். அப்போது போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அப்போது எங்களோடு யார் இருந்தார்கள் என்றால் ராஜஷ் மற்றும் முகமதுஷாகிம் ஆகியோர் இருந்தார்கள்.. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் அசா1 மற்றும் அசா2 எனது ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களுக்கு அனுசரனையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மீது திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் சண்டை வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றாலும் போலிசார் சொல்லி கொடுத்ததின் அடிப்படையில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 19/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW- 3 | Village: | |
| Name | : ராஜேஷ் | Age | :29 |
| Father's/Husband's Name | : ராஜா | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 21.02.2024**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமைக் காவலர் திருமதி. ரமா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

1 முதல் 3 **எதிரிகள் ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் குறிச்சிமலை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் செண்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் ராஜவேல், ஹரிகரன் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது ஊர்க்காரர்கள் ஆவார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. குறிச்சிமலையிலிருந்து புழுதிக்குடிக்கு எவ்வளவு தூரம் என்றால் சுமார் 3 கி.மீ. தூரம்

இருக்கும். நான் என்ன வேலை சம்மந்தமாக புழுதிக்குடிக்கு சென்றேன் என்றால் செண்ட்ரிங் வேலைக்கு சென்றேன். நான் செண்ட்ரிங் வேலைக்கு சென்றதாக போலிசார் விசாரணையில் சென்னேனா என்றால் சொன்னேன். நான் போலிசார் விசாரணையில் புழுதிக்குடி அய்யா கோவில் வளைவு அருகே சென்றபோது அந்த இடத்தில் கூட்டமாக இருந்ததாகவும் நான் சென்று பார்த்ததாகவும் சொனன்னோ என்றால் சென்னேன். நான் போலிசார் விசாரணையில் ராஜவேல் மற்றும் ஹரிகரன் வெட்டு காயத்துடன் இருந்தனர் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். நான் போரிசார் விசாரணையில் கரிகாலன் அரிவாளுடன் நின்றதாகவும் முருகன் கட்டையுடன் நின்றதாகவும் அதை பார்த்துவிட்டு எனது நண்பர் சுரேசுக்கு தகவல் சொன்னதாகவும் சொன்னேனா என்றால் சொன்னேன். ராஜவேல் மற்றும் ஹரிகரனை திருவிடைமருதூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் என்னை எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் எனது வீட்டில் வைத்து விசாரித்தார்கள். விசாரித்த தேதி தற்போது ஞாபகமில்லை. நான் போலிசார் விசாரணையில் அரிவாளையும் வீடியோ பதிவையும் காவல் நிலையத்தில் ஒப்படைத்ததாக சொன்னேனா என்றால் சொன்னேன். நான் ராஜவேல் மற்றும் ஹரிகரனுடன் சம்பவ இடத்திற்கு சென்றேனா என்றால் ½ மணி நேரம் கழித்து சென்றேன். அப்போது என்னுடன் யார் வந்தார் என்றால் நான் மட்டும்தான் சென்றேன். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் அசா1 மற்றும் அசா2 எனது ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களுக்கு அனுசரனையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**